விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 301 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 30 வியாழக்கிழமை (16.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## யாழ்.நீதிமன்றப் பதிவாளரால் வெளியேற்றப்பட்ட கோப்பாய் பொலிஸார்



(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணி யாழ்.நீதிமன்றின் பதிவாளர் முன்னிலையில் அதன் உரிமையாளர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் கோப்பாய்,

15ஆம் பக்கம் பார்க்க

## பலப்படுத்தப்பட்ட பாதுகாப்புடன் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட செவ்வந்தி







(கொழும்பு)
சஞ்சீவ குமார சமரத்ன எனப்படும் கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் முக்கிய சந்தேகநபராகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி உட்பட ஆறு இலங்கையர்

15ஆம் பக்கம் பார்க்க

- ஒற்றுமையாக -

# மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில்

## தமிழ்க் கட்சிகள் யாழில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை ஒற்றுமையாக எதிர்கொண்டு வடமாகாண சபையைக் கைப்பற்றுவது மற்றும் கட்சிகள் போட்டியிடும் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்க் கட்சிகளின் கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் பொலிஸார் இருவருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸாருக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்

15ஆம் பக்கம் பார்க்க

## நகை, பணம் திருட்டு

### சுன்னாகத்தில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பகுதியில் 7 பவுண் நகை மற்றும் 3 இலட்சம் ரூபாய் பணம் என்ப

15ஆம் பக்கம் பார்க்க

## பிரகீத் எக்னெலிகொட, லசந்த விக்கிரமதுங்க கடத்தலுடன் கோட்டாவுக்குத் தொடர்பு

### சரத் பொன்சேகா பகிரங்கம்



(கொழும்பு)
பிரகீத் எக்னெலிகொட மற்றும் லசந்த விக்கிரமதுங்க கடத்தலுடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தொடர்பு உள்ளதாக முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா வெளிப்படுத்தினார்.
யூரியூப் சனல் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர்

16ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் பொலிஸ் நிலையம்

### தற்காலிகமாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் இயங்கவுள்ளது.
நீதிமன்ற உத்தரவில் கோப்பாய் பொலிஸார் வெளியேற்றப்பட்டமையால் தற்காலிகமாக கோப்பாய் பொலிஸ் நிலையம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதியில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ம-7,33)

## கொடிகாமத்தில் குழு மோதல்

### 9 பேர் படுகாயம்

(சாவகச்சேரி)
கொடிகாமம் கெற்பேலியில் இரு குழுக்களுக்குள் இடையே இடம்பெற்ற மோதலில் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
கடந்த திங்கட்கிழமை இரவு

15ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டியில் சித்திரவதை செய்யப்பட்டு பெண் கொலை

### பெண் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
சங்குப்பிட்டியில் சித்திரவதை செய்யப்பட்டு பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் பெண்ணொருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டிருந்தது.
இதில் காரைநகரைச் சேர்ந்த இரு பிள்ளைகளின்

15ஆம் பக்கம் பார்க்க

## தெற்குக் கடலில் 839 கிலோ போதைப்பொருள் மீட்பு



16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு

# வடக்கு மாகாண ஆசிரியர்கள் தொடர் போராட்டம்




வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றம் பாரபட்சமானதும் பழிவாங்கல் நோக்கமாகவும் கருதும் நிலையில் குறித்த இடமாற்றத்தை உடன் இடை நிறுத்தி மீள மேற்கொள்ள வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் மதியம் ஆளுநர் செயலகத்தை முடக்கிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் வடக்குக் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஜெயச்சந்திரன், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் என அனைவரும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

பின்னர் அதிகாரிகள் அனைவரும் கலந்துரையாடல் முடிந்து வெளியேறினர். இறுதியாக வடக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் வெளியேறிய போது போராட்டக்காரர்கள் அவரை வழிமறித்தபோது, ஆளுநர் செயலகம் உத்தியோகபூர்வ அறிவிப்பு வழங்கும் என்று போராட்டக்காரர்களுக்கு கூறிவிட்டு சென்றார்.

பின்னர் ஆளுநர் செயலகத்தில் அதிகாரிகள் எவரும் இல்லை என்றும், தாங்கள் உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் ஆளுநர் செயலகத்துக்குள் செல்ல முயற்சித்தவேளை பொலிஸார் அவர்களை வழிமறித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் ஆளுநரின் செயலாளர், ஜோசப் ஸ்டாலின் உட்பட சிலரை அழைத்து கலந்துரையாடினார். இந்நிலையில் இடம்பெற்ற இடமாற்றத்தின் அடிப்படையில் செயற்படுங்கள் என ஆளுநரின் செயலாளர் கூறியதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அத்துடன் நாடளாவிய ரீதியாக இதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். பின்னர் ஆளுநர் பின் பக்கத்தால் ஆளுநர் செயலகத்தில் இருந்து வெளியேறினார்.

(ம-7,33,104)

## விரிவுரையாளர் இரட்ணம் காலமானார்




யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி காலமானார்.

வர்த்தகத்துறையில் சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய ஆசான் இரட்ணம் அவர்கள் வர்த்தகப் பாடம் சார்ந்த பல நூல்களை எழுதி உயர்தர மாணவர்களின் கல்விக்கு பேருதவி புரிந்தார்.

நகைச்சுவைப் பாங்குடன் கற்பிக்கின்ற பேராற்றல் கொண்ட ஆசான் இரட்ணம் அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு எனக் கல்வியியலாளர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

(ந)

## இரு அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்



(கொழும்பு)

துறைமுக மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளராக இலங்கை திட்டமிடல் சேவை விசேட தர அதிகாரியான டபிள்யு. டபிள்யு. எஸ். மங்கள நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான திருமதி. டபிள்யு. எம்.டீ.ரீ. விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்கவினால் நேற்று(15) ஜனாதிபதி செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

டபிள்யு. டபிள்யு. எஸ். மங்கள, இதற்கு முன்னர் பாது காப்பு அமைச்சின் திட்டமிடல் (அனர்த்த முகாமைத்துவம்) பணிப்பாளர் நாயகமாக பணி யாற்றியதோடு டபிள்யு. எம்.டீ.ரீ. விக்ரமசிங்க பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் மேலதிகச் செயலாளராக பணியாற்றியிருந்தார். (ம-7)

## இந்திய மீனவர்களது விளக்கமறியல் நீடிப்பு

வடக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 29 பேரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களது வழக்கு, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த 29 மீனவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பில், நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 12 மீனவர்கள் மற்றும் கடந்த 09 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 17 மீனவர்களின் விளக்கமறியலின் உத்தரவே நேற்று மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. (ம-7)




## பாதாளக் குழுக்களின் பின்னணியை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

### நாமல் எம்.பி வலியுறுத்து

பாதாளக்குழுக்களின் பின்னணியில் இருப்பவர்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை (15) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. விசாரணை கட்டமைப்புக்களை அரசியல் தலையீடுகள் ஆக்கிரமித்துள்ள நிலையில்,நீதிமன்ற கட்டமைப்பு சுயாதீனமாகச் செயற்படுகிறது. விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் நோக்கங்களுக்காக கீழ்த்தரமாகச் செயற்படுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கணேமுல்ல சஞ்ஜீவ படுகொலையின் சந்தேக நபரான செவ்வந்தி கைது செய்யப்பட்டமை சிறந்தது. போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதாளக் குழுக்களின் பின்னணியை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். அனைத்து விடயங்களுடனும் ராஜபக்ஷர்களை தொடர்புப்படுத்துவது முறையற்றது.நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டு அரசாங்கம் செயற்படுகிறது. எம்மை விமர்சித்துக் கொண்டு இருக்காமல் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ம-7)

கல்யாணி
நகை மாளிகை
வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதி பணம் வழங்கப்படும்.
(C-4105)
077 784 0379
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் பருவமழை

## 250 மி.மீ வரை மழைக்கு வாய்ப்பு!

**(கொழும்பு)**

**இன்று முதல் 28ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கையில் வட கிழக்கு பருவமழை தீவிரமடையவுள்ளதால், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிக மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இக்காலப்பகுதியில், நாட்டின் சில பகுதிகளில் 250 மில்லி மீற்றருக்கும் அதிகமாக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக, ஆறுகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வெள்ள அபாயத்தை எதிர்கொள்ள அனைத்துத் திணைக்களங்களும், பொதுமக்களும் தயாராக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழைவீழ்ச்சி முன்னறிவிக்கப்பட்டபடி நீடித்தால், அபாயகரமான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் சாத்தியமான வெளியேற்றத்திற்கும் தயாராக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல தேவையான ஏற்பாடுகளை முன் கூட்டியே செய்து கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# முன்னாள் அமைச்சர் மனுஷ கைது



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் போது விவசாயத்துறை வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்புவதில் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாகவே அவர் நேற்று வாக்குமூலம் வழங்க கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் முன்னிலையாகிய நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். (நி)

## 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு இன்ஸ்டாகிராமில் புதிய கட்டுப்பாடுகள்

### அறிமுகப்படுத்தியது மெட்டா

(கொழும்பு)

18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் இன்ஸ்டாகிராமை அதிகளவில் பயன்படுத்தி வரும் வேளையில் அதில் அபாயகரமான மோசமான உள்ளடக்கங்களை அவர்கள் பார்ப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதனால் மெட்டா நிறுவனம், 18 வயதுக்குக் குறைவானவர்களால் பாலியல் உள்ளடக்கிய காட்சிகள், போதைப் பொருள், அபாயகரமான சண்டைக் காட்சிகள் அல்லாத காணொளிகளைப் பார்க்க வழிவகை செய்துள்ளது. இந்த வசதிகளைப் பெற்றோர்களின் அனுமதியின்றி மாற்ற முடியாது என தெரிவிக்கப்படுகிறது. திரைப்படங்களுக்கு PG-13 ரேட்டிங் இருப்பது போல், இன்ஸ்டா கிராமிலும் புதிய நடைமுறையை மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கட்டுப்பாடுகளை விரும்பும் பெற்றோருக்கு, இன் ஸ்டாகிராமில் Limited Con tent என்ற வசதி கொண்டு வரப்பட்டுள்ளது. சிறுவர்கள் தங்களை 18 வயதுக்கு மேற்பட்டோர் எனக் கூறினாலும் அதனைக் கண்டறிய அதற்கான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்று மெட்டா தெரிவித்துள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கனடா நாடுகளில் விரைவில் இந்த நடைமுறை அறிமுகமாகவுள்ளது. (நி)

## ஆறாண்டு சென்றதுவோ அன்னையே!



தோற்றம் 11 - 01 - 1948

மறைவு 23 - 09 - 2019

### அமரர். பரமேஸ்வரி பரராஜசிங்கம்

(திதி–அபர பக்க தசமி)

நீறுபொழி நெற்றியுடன் திலகம் ஓங்க
நித்தமுயர் அன்புவழி அறத்தைக் காத்து
பேறெனவே குடும்பமதை உறவை பேணி
பிரியமுடன் விருந்தோம்பல் சிறப்பு சேர்த்து
தேற வழி பல தந்து திடத்தைக் கூட்டி
தித்திக்க வைத்தவெம் அன்னை சென்று
ஆறாண்டு ஆனதுவோ அவனி நீத்து
ஆதியருள் பேறுடன் திருத்தாளில் வாழி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைக்கோயில்,
சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

(C-411)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 18 - 08 - 2005

விண்ணில் 01 - 10 - 2021

### அமரர். கணேசன் கிருசிகன்

எல்லோருடைய மனதிலும் அழியா கல்வெட்டாய் இன்றும் வாழும் மழலை எங்கள் கிருசி.....
வருடங்கள் நான்கு ஆனாலும் என்றும் மனம் பூத்து புன்னகைக்கும் புன்னகைப்பூ உன்னை
இந்த நொடி வரை அனைவரும் நினைக்க மறந்ததில்லையய்யா கிரு...
ஞாலம் போற்ற பன்னிரெண்டு பதக்கங்களை தன் வசம் கொண்ட
சாதனை நாயகன் உன்னை...
காலனவன் தான் ஆடிய பதினாறு வயதாட்டத்தினிலே உன் உயிரையே பற்றி
நிற்பான் என்று நீயும் எண்ணியதில்லை , எங்களினாலும் இன்றுவரை ஏற்க
முடியவில்லையடா தங்கமே......
காலனவனின் கண்ணாம்பூச்சி ஆட்டத்தினில் எங்கள் கிருவை கொண்டு போனது ஏனோ???
உனது கனவுகள் பலதும் உடலுடன் கொண்டு சென்று விட்டதேனய்யா???
காலங்கள் சென்றாலும் இன்றுவரை ஒவ்வொரு நாட்களிலுமே உன் பொன்
நினைவுகளால் மனம் வாடிய
தேடும் விழிகளில் கண்ணீர் ஊற்றெடுத்து மடிகின்றோமய்யா......

(1645)

பிரிவால் துயருறும் அத்தைமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசியமட்ட 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் வவுனியா காமினி ம.வி மாணவனுக்கு தங்கம்



கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத்துறை திணைக் களம் ஆகியன இணைந்து ஏற் பாடு செய்த 38ஆவது அகில இலங்கை பாடசாலைகள் விளை யாட்டு விழாவின் மெய்வல்லு நர் போட்டியில் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாணவன் இ.விகிர்தன் புதிய சாதனை நிலை நாட்டி வரலாறு படைத்துள்ளார்.

தியகம, மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் நடை பெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக் கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியை 15 நிமிடங்கள், 23.40 செக்கன்களில் நிறைவு செய்ததன் மூலம் வவுனியா காமினி மகா வித்தியாலய மாணவன் இ.விகிர்தன் புதிய சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண் டார். (3)

# உலகக்கிண்ண கால்பந்து போட்டிக்கு முதல்முறையாக கேப்வெர்டே தகுதி



உலகக்கிண்ண கால்பந்து போட்டி அடுத்த வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 19 ஆம் திகதி வரை கனடா, மெக்சிக்கோ, அமெரிக்கா ஆகிய 3 நாடுகளில் நடைபெறவுள்ளது. இதில் 48 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

2022 ஆம் ஆண்டு போட்டியை விட 16 அணிகள் கூடுதலாகும். போட்டியை நடத்தும் 3 நாடுகள் நேரடியாக விளையாடும். மற்றைய நாடுகள் தகுதி சுற்று மூலம் தேர் வாகும்.

இந்த நிலையில் 22ஆவது நாடாக உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கு ஆபிரிக்க கண்டத்தில் உள்ள கேப்வெர்டே நாடு தகுதி பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடந்த ஆட்டத்தில் அந்த அணி எஸ் வதினியை 3-0 என்ற கோல் கணக் கில் வீழ்த்தியது. இதன் மூலம் டி பிரிவில் கேப்வெர்டே 23 புள்ளிகளை பெற்று உலகக் கிண்ண போட்டிக்கு தகுதி பெற்றது.

இதனடிப்படையில் கேப்வெர்டே முதல் முறையாக உலகக் கிண்ண போட்டிக்கு முன்னேறி இருக்கிறது.

ஆபிரிக்க கண்டத்தில் இருந்து உலகக் கிண்ணபோட்டிக்கு இது வரை 6 நாடுகள் தகுதி பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# வெறுப்பை வென்ற ஹொக்கி விளையாட்டு; கை கொடுத்த இந்திய - பாக். வீரர்கள்

பஹல்காம் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து இந்தியா நடத் திய ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை யால் இந்தியா - பாகிஸ்தான் உறவில் கடும் விரிசல் ஏற்பட்டது. இதனால் லெஜெண்ட்ஸ் கிரிக் கெட்டில் பாகிஸ்தான் உடன் இந்திய அணி வீரர்கள் விளையாட மறுத் தது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் விளையாடிய இந்திய அணி வீரர்கள் பாகிஸ்தான் வீரர்களுடன் கைகுலுக்க மறுத்தனர். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாகி பேசுபொருளானது.

இதனையடுத்து ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவரும் பாகிஸ்தான் அமைச்சருமான மோசின் நக்வியி டம் இருந்து ஆசியக்கிண்ணத்தை வாங்க இந்திய அணி விரும் பாததால் இப்போது வரை ஆசிய கிண்ணம் இந்திய அணியிடம் வழங்கப்படவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற மகளிர் ஆசியக் கிண்ண கிரிக்கெட்டிலும் பாகிஸ்தான் அணி வீராங்கனை களுடன் இந்திய அணி வீராங் கனைகள் கைகுலுக்க மறுத்தனர்.

இந்நிலையில், ஹொக்கி போட்டி யில் இந்தியா - பாகிஸ்தான் வீரர்கள் கை கொடுத்துக்கொண்டது அனை வரின் கவனத்தையும் ஈர்த்துள் ளது.

மலேசியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் 21 வயதிற்குட்பட்ட சுல்தான் ஆஃப் ஜோகூர் கிண்ண ஹொக்கி போட்டியிலேயே இந் தியா - பாகிஸ்தான் அணிகள் மோதி யிருந்தன. இப்போட்டி 3-3 என்ற கணக்கில் சமசிலையில் முடிவடைந் தமை குறிப்பிடத்தக்கது. (3)



# 200 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தி பதிலடி கொடுத்த ஆப்கான்!




ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே 3 போட்டி கள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றது.

இதில் முதலில் நடந்த ரி-20 தொடரை பங்களாதேஷ் அணி 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனை தொடர்ந்து இரு அணி களுக்கு இடையே ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதல் 2 போட்டி களிலும் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிய நிலை யில் 3ஆவது மற்றும் இறுதி ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில்துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக இப்ராகிம் சத்ரான் 95 ஓட்டங்களும் முகமது நபி 62 ஓட்டங்களும் குவித்தனர். பங் களாதேஷ் தரப்பில் சைப் ஹசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து விளையாடிய பங்களாதேஷ் அணி, ஆப்கானிஸ் தான் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டு களை பறிகொடுத்தனர். இதனால் பங்களாதேஷ் அணி 27.1 ஓவரில் 93 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக சைப் ஹசன் 43 ஓட்டங்கள் எடுத்தார். மற்றைய 9 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங் களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் ஆப்கானிஸ்தான் அணி 200 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றது. மேலும் ரி-20 தொடரை முழுமையாக கைப்பற்றிய பங்களாதேஷ்க்கு ஆப்கானிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை -பளை

**01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான காலப் பகுதிக்கு இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2026**

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- 16.10.2025 தொடக்கம் 29.10.2025 வரை (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- 30.10.2025 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- 30.10.2025 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 3,649,800.00 | 54,700.00 | 2,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக்கடை | 44,665.40 | 5,000.00 | 2,000.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 1,386,660.00 | 20,800.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 104,500.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 30.10.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை குத்தகைத்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08 கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல் களத்திலேயே மாடு, ஆடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-4116)

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை**
**16.10.2025.**





அரியாலை நாவலடி உதயதாரகை சிறுவர் கழகத்தின் சிறுவர் தினக்கொண்டாட்டம் உதயசூரியன் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி சிறுவர் கழக உப தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

# பிரதமர் ஹரிணி இந்தியா விஜயம்



(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ளார் என வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தனது பயணத்தின் போது, பிரதமர், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உயர் மட்டக் குழுவினருடன் கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.

மேலும், ஒக்டோபர் 17 ஆம் திகதி, நடைபெறவுள்ள மாநாட்டில், பிரதமர் "நிச்சயமற்ற காலங்களில் மாற்றத்தை வழி நடத்துதல்" என்ற கருப்பொருளில் உரையாற்ற உள்ளார். (நி)

# பருத்தித்துறை நகர சபைச் செயலாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளால் சபையில் குழப்பம்

## தவிசாளர் டக்ளஸ் போல் பகிரங்க குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபைச் செயலாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் சபை நிர்வாகம் குழப்பமடைவதாகவும் பொது மக்கள் சேவை பாதிக்கப்படுவதாகவும் பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் வின்சென்ட் போல் டக்ளஸ் போல் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

பருத்தித்துறை நகரசபையின் நிர்வாகச் செயற்பாடுகளில் அண்மைக் காலமாக நிலவும் நிர்வாகக் குழப்பங்கள் தொடர்பில் பொது மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் மக்கள் பிரதிநிதி மற்றும் நகரபிதா என்ற வகையில், சபையின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்வது எனது பிரதான பொறுப்பாகும்.

எமது பிரதேச மக்களின் நலனை முன்னிறுத்தி எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களை நடை முறைப்படுத்துவதில் நகர சபையின் செயலாளர் ஒரு நிர்வாகப் பங்காளராகச் செயற்பட வேண்டும்.

துரதிஸ்டவசமாக, செயலாளர் சபையின் தலைவரான எனக்கு சட்டத்தால் அதிகார மளிக்கப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான அலுவலக நிர்வாக ஒத்துழைப்பினை வழங்கத் தவறுவதோடு, எனது வழிகாட்டல் மற்றும் பணிப்புரைகளுக்கு எதிர்மாறாகவும் செயற்பட்டு வருகின்றார்.

சபையின் கொள்கை மற்றும் சட்டரீதியான முடிவுகளின் அடிப்படையில், தவிசாளரால் பிறப்பிக்கப்படும் நிர்வாக ரீதியான பணிப்புரைகளை செயலாளர் வேண்டுமென்றே தாமதப்படுத்துவதுடன், பல சந்தர்ப்பங்களில் முற்றாகப் புறக்கணித்துள்ளார்.

நகரசபையின் உத்தியோகத்தர்களுக்கு, தவிசாளரான எம்மால் குறித்துரைக்கப்படும் பணிப்புரைக்கு மாறான, முரண்பட்ட பணிப்புரைகளை செயலாளர் தன்னிச்சையாக வழங்குதல் மூலம் திட்டமிட்ட உள்ளக நிர்வாகக் குழப்பங்களை உருவாக்கி வருகின்றமை என்னால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது அன்றாட அலுவலக நிர்வாகச் செயற்பாடுகளில் குழப்பத்தையும், உத்தியோகத்தர்களிடையே கடமையில் ஆர்வமின்மையையும் ஏற்படுத்தும்.

இத்தகைய உள்ளக முரண்பாடுகளால், சபை உத்தியோகத்தர்கள் தவிசாளரான என்னை அணுகுவதற்கோ எனது அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைகளைச் செயற்படுத்துவ தற்கோ தயங்கி வருகின் றனர்.

இவ்விடயம் தொடர்பில், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் கௌரவ ஆளுநரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிர்வாகக் குழப்பத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கும், அலுவலக மற்றும் பொதுச் சேவைகள் எவ்வித இடையூறுமின்றித் தொடரப்படுவதை உறுதிப்படுத்தவும் தற்போதைய செயலாளரை இடமாற்றம் செய்து, வேறு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு கோரியிருந்தேன்.

எனவே, அலுவலக நிர்வாகத்தைச் சீர்படுத்துவதன்மூலம் எமது பொது மக்களுக்கான சேவைகளை திறம்பட முன்னெடுப்பதற்கு காத்திரமான நடவடிக் கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து மேற் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கடற்பரப்பில் சிவப்பு நண்டுகளின் வருகையால் மீனவர்கள் பாதிப்பு

(மன்னார்)

**மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் தமது கடற்பரப்பில் காணப்படும் சிவப்பு நண்டுகளின் தாக்கம் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

மன்னார் தீவுப்பகுதி கடற்றொழில் சார் கிராமங்களை கொண்ட பகுதி. இவற்றில் தாழ்வுபாடு கிராமமும் ஒன்றாகும்.

குறித்த கிராமத்தில் கடந்த பல நாட்களாக" சிவப்பு நண்டு" என அழைக்கப்படுகின்ற ஒரு வகையான நண்டினால் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நண்டுகள் மீனவர்களின் வலைகளில் பாரியளவில் சிக்குவதால் மீனவர்களின் வலை தொகுதிகள் சேதமடைகின்றன.

அத்துடன் குறித்த நண்டுகளை எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாது என



மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் குறித்த சிவப்பு நண்டினால் இப்பகுதியில் பாரிய சேதம் ஏற்பட்டதாகவும் அதன் பிற்பாடு இந்த ஆண்டு இவ்வாறு வருகை தருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மீனவர்களின் வலைகளில் சிக்கும் குறித்த நண்டுகளை வலையில் இருந்து பிரித்து எடுக்க முடியாத நிலை காணப்படுவதோடு, இதனால் வலைகள் பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (8-285

# உரிமை கோரப்படாத வாகனங்கள் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக பாரப்படுத்தப்பட்டு இன்று வரை உரிமை கோரப்படாத வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை அலுவலக நாட்களில் பதிவாளரைத் தொடர்பு கொண்டு, வாகனங்கள் தொடர்பான உரிமையை இரண்டு மாத காலத்திற்குள் உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் குறித்த சான்றுபொருட்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 432 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)



வட மாகாண சபரிமலை யாத்திரிகர்கள் இணையம் நடத்தும் மாபெரும் மாநாடும் மகாகுரு ரவிசுவாமியின் கௌரவிப்பும் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. வட மாகாண சபரிமலை யாத்திரிகர்கள் இணையத்தலைவர் தவத்திரு.தரணீஸ்வர குருசுவாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன்,கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், குரு சுவாமிகள் உள்ளிட்ட ஐயப்ப பக்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் - தேவானந்தன்)

# தீபாவளிப் பண்டிகை விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கல்ட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 4.45 மணிக்கு விஷேட பூஜை நடைபெறவுள்ளதென ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)



வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தின் வாணி விழா கடந்த 10ஆந்திகதி தலைவர் துவாரகன் தலைமையில் இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# திருமறைக்கலாமன்றத்தின் வைரவிழா

(யாழ்ப்பாணம்)

கலைப் பணியில் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் திருமறைக் கலாமன்றத்தின் வைர விழா நிகழ்வுகள் எதிர்வரும் 18,19ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு இரு நாட்களும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திருமறைக் கலாமன்றத்தின் ஏனைய பிராந்திய தமிழ், சிங்கள மன்றங்களும் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகளை வழங்கவுள்ளன.

முதல்நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ், மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் ,சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஆசியுரைகளை பேராசிரியர் ம.பாலகைலாசநாத சர்மா, வண. கலைமாணி மீஹாஹயன்துரை சிறி விமல தேரர்,அஷ்ஷைய்க் முஜிபுர் றஹ்மான் மௌலவி ஆகியோர் வழங்குவார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக பாணந்துறை,புத்தளம் திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் நடனங்கள், திருமறைக் கலாமன்ற இளையோர் அவையினரின் ஒயிலாட்டம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர் இ. ஜெயகாந்தனின் மெல்லிசை,இளவாலைத் திருமறைக் கலாமன்றம் வழங்கும் " பாஞ்சாலி சபதம்" நடன நாடகம்,யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் "சத்தியவான் சாவித்திரி " இசைநாடகம் போன்றவையும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபனும்,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் ,கௌரவ விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ப. யோ.ஜெபரட்ணம் அடிகளாரும் கலந்து சிறப்பிப்பார்கள்.

கலை நிகழ்ச்சிகளாக அவிசாவளை திருமறைக் கலாமன்றம் மற்றும் கலைத்தூது அழகியல் கல்லூரி வழங்கும் நடனங்கள் , திருமறைக் கலாமன்றம் தயாரித்தளிக்கும் "பூதத்தம்பி" நாட்டுக் கூத்து என்பனவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும்,நாடகப் பயிலக மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (8)

# 48 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(தருமபுரம்)

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேரதீவு பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 48 கிலோ 400 கிராம் கேரள கஞ்சாவுடன் வவுனியாவை சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீதிச் சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு இரண்டு நபர்களும் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். ([illegible])

# மானிப்பாயில் கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பொது நூலகங்கள் இணைந்து [illegible] மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை மானிப்பாய் பிரதேச சபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள தமிழ்ப் பாட மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கல்விக் கருத்தரங்கை யாழ்.மாவட்ட தமிழ்ப் பாட ஆசிரியர் நவரட்ணம் சத்தியவேந்தன் நடத்தவுள்ளார். எனவே உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள தமிழ் பாடத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றிப் பயன் பெறுமாறு மானிப்பாய் பிரதேச சபை நூலக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லைஃப் இன்

## 18 மில்லியன் பெறுமதியான 'பிரணாம' புலமைப்பரிசில்




செலிங்கோ லைஃப் நிறுவனம் அண்மையில் 128 திறமையான இளம் மாணவர்களின் கல்விப் பயணத்தை ஊக்குவிக்கும் வகையில் பிரணாம் புலமைப்பரிசில் தொகையை வழங்கியது.

எதிர்கால தலைவர்களை உருவாக்குவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பின் அடையாளமாக திகழும் இந்த நிகழ்வின் இந்த ஆண்டுக்கான 24 ஆவது பதிப்பில், இந்த புலமைப் பரிசில் விருதுகள் வழங்கப் பட்டன.

இந்த பிரணாம் புலமைப் பரிசில் கல்வி பரிசில்தொகை வழங்கும் நிகழ்வானது. 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நிலையில் அன்றிலிருந்து அண்மையில் நடந்த இவ்வாண்டிற்கான பதிப்பு வரையில் வழங்கப்பட்ட மொத்த புலமைப்பரிசில் தொகைகளின் எண்ணிக்கை 3,466 ஆகும். அத்துடன் இதன் மொத்த பெறுமதி ரூ. 240 மில்லியன் ஆகும். சமீபத்திய நிகழ்வில் மட்டும் ரூ. 18 மில்லியன் நான்கு நிலைகளில் வழங்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் சிறப்பான சித்தி, மாவட்ட மட்ட தரவரிசை. மேலும் விளையாட்டு, கலை மற்றும் பிற படைப்பாற்றல் துறைகளில் அபூர்வ சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த புலமைப் பரிசில் தொகைகள் வழங்கப் பட்டன.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுனில் ஷாந்தா தனது பிரதான உரையில், செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் பிரணாம புலமைப்பரிசில் தொகை திட்டத்துடன் இணைந்த 24 ஆண்டு கால பயணத்திற்கு மரியாதை செலுத்தினார். இந்தத் திட்டம் ஏற்கனவே இலங்கையிலும் வெளிநாடுகளிலும் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றி வரும் தலைவர்களை உருவாக்க உதவியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி என்பது திருட முடியாத ஒரே செல்வமாகும் அது அறிவு மற்றும் திறன் களை வழங்கி, தொழில் வாய்ப்புகளைத் திறந்து வைக்கிறது, தீர்மானிக்கும் திறனை வலுப்படுத்துகிறது. அபாயங்களை ஏற்கும் நம்பிக்கையை உருவாக்குகிறது. மேலும் தனிநபர் மற்றும் சமூக முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கிறது என அவர் வலியுறுத்தினார்.

புதிய புலமைப்பரிசில் உதவித்தொகை பெறுபவர்களை வரவேற்ற செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரியுமான ரங்க அபேநாயக்க, முன்னைய ஆண்டு கள் அளவில் பிரணாம் புலமைப்பரிசில் பெற்றவர்கள் சாதனைகள் குறித்து பெருமை கொள்வதாகக் கூறினார்.

அவர்களில் பலர் இன்று மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில் முனைவோராக உள்ளனர் எனக் கூறினார்.

செலிங்கோ லைஃப் நிறுவனம், பிரணாம் புலமைப் பரிசில்களை 2024 ஆம் ஆண்டில் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற்ற 26 மாணவர்களுக்கும், 2023 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத்தில் (G.C.E. Ordinary Level) சிறந்த மதிப்பெண்களைப் பெற்ற 25 மாணவர்களுக்கும், மேலும் 2023 ஆம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பொதுப் பரீட்சையில் (G.C.E. Advanced Level) தமது மாவட் டங்களில் மிக உயர்ந்த மதிப் பெண் பெற்ற 67 மாணவர்களுக்கும் வழங்கியது.

அதனைத் தொடர்ந்து, தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, கலை, நாடகம், புத்தாக்கம் அல்லது படைப்பாற்றல் துறைகளில் சிறந்து விளங்கிய இளம் மாணவர்களுக்கு 10 தகுதிகாண் விருதுகளும் வழங்கப்பட்டன.

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- திரு. பாலச்சந்திரன் திலக்ஷன்
விண்ணப்பதாரர் பெயர் :- திரு. பாலச்சந்திரன் திலக்ஷன்
முகவரி :- மலைவேம்படிச்சந்தி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19, வல்லை சங்கானை வீதியில் ஆதன இலக்கங்கள் **638, 640, 642, 644** இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை 'பெரியதோட்டம்' என்ற ஆதனம் Mrs.M.சச்சிதானந்தம் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு ச.கிருஸ்ணவேணி முகதாவில் 2022.12.31 ஆம் திகதியில் 5475 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய முதுச வெளிப்படுத்தல் உறுதி மூலம் 'பெரியதோட்டம்' நிலப்பரப்பு 01 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரால் தனக்குரியதென முதுச வெளிப்படுத்துதல் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. மேலும் குறித்த உறுதியில் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 1980.08.20 ஆம் திகதியில் 3795 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் தனது பெற்றோரின் திருமணத்திற்கு முன்பாக தனது தந்தையாரின் சொத்தான கொள்வனவு எனவும், மேலும் தனது இரு சகோதரிகளுக்கும் சீதனம் வழங்கப்பட்டது எனவும் தனது தந்தையார் காலம் சென்றுவிட்டதாலும் தான் ஒரே ஆண் வாரிசு என்பதாலும் குறித்த ஆதனம் தனக்குரியது என்றும் விண்ணப்பதாரரினால் வெளிப்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. 5475 ஆம் இலக்க உறுதி யாழ்ப்பாணக் காணிப்பதிவகத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள **G185/79** காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாளின் பிரதி பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பித்துள்ளார்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை, கிராமசேவகர் பிரிவு J/220, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பகுதி, வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவு 'பெரியதோட்டம்' நிலப்பரப்பு ஒன்றும் (நிலப்பரப்பு 1) கடைக்கட்டிடங்களும்


இதன் எல்லைகள்
கிழக்கு :- வயிரவன் சின்னத்தம்பியின் ஆதனம்
வடக்கு :- வயிரவன் சின்னத்தம்பியின் ஆதனம்
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- வீதி
இவ்வெல்லைப்படி இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பாலச்சந்திரன் திலக்ஷன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பாலச்சந்திரன் திலக்ஷன் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி )**



ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி ராஜ மல்லிகை சிவசுந்தர சர்மா வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மேற்கு ஐயனார் கோவில் ஆலய அலங்கார திருவிழாவின் ஐந்தாம் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஐயனார் குதிரை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.
(படம்: சிவசாந்தன்)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை ஆசிரியை
*திருமதி. வதனிமுரளி* அவர்களின்
அன்புக் கணவரும் எமது பாடசாலையின்
செயற்பாடுகளில் அக்கறையுள்ள
நலன்விரும்பிகளில் ஒருவருமான

**திரு. மாணிக்கராஜா முரளி**
***(SLAS)***

அவர்கள் அண்மையில் வழங்கப்பட்ட
இலங்கை நிர்வாக சேவை நியமனத்தை
பெற்று வடக்கு மாகாண மகளிர்
விவகார அமைச்சின் உதவிச்
செயலாளராக பதவியுயர்வு பெற்றமையை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(1647)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்,
பருத்தித்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# புகைப்பழக்கத்தை நிறுத்துங்கள்!

## மெலோனிக்கு துருக்கி ஜனாதிபதி 'அட்வைஸ்'



(கெய்ரோ)

காஸாவில் போர் நிறுத்தம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட உலகத் தலைவர்கள் எகிப்தில் கூடியவேளை இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனியின் புகைப் பிடிக்கும் பழக்கம் தொடர்பாக துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் கிண்டலாகப் பேசியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

மாநாட்டில் மெலோனியிடம் பேசிய எர்டோகன், "நீங்கள் விமானத்தில் இருந்து இறங்கியபோது பார்த்தேன். நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்.

ஆனால், உங்கள் கையில் சிகரெட் இருந்தது.

இந்த பழக்கத்தை நீங்கள் கண்டிப்பாக நிறுத்த வேண்டும்" என்று கூறினார்.

எர்டோகானின் பேச்சைக் கேட்ட அருகில் இருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் சிரித்துக்கொண்டே குறுக்கிட்டு, "அது அசாத்தியம்!" என்று நகைச்சுவையாகக் கருத்து தெரிவித்தார்.

இதற்கு மெலோனியும் அதேபோல வேடிக்கையாகப் பதிலளித்தார். அதாவது, "எனக்குத் தெரியும்.

ஆனால், நான் புகைப் பிடிப்பதை நிறுத்தினால், எனக்கு எரிச்சல் அதிகமாகி, யாரையாவது ஏதாவது சொல்லிவிடுவேனோ!" என்று அஞ்சுவதாக கூறி சிரித்தார்.

இது தொடர்பான காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.

துருக்கியை புகைப்பழக்கம் இல்லாத நாடாக மாற்ற வேண்டும் என்ற தனது நோக்கத்தை எர்டோகான் அடிக்கடி கூறிவருகிறார். மறுபுறம், வெளிநாட்டுத்தலைவர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள தனது புகைப்பழக்கம் உதவியதாக மெலோனி முன்பு ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பங்களாதேஷ் ஆடையகமொன்றில்

## பாரிய தீ விபத்து 16 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

பங்களாதேஷில் உள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் குறைந்தது 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

16 உடல்கள் மீட்கப்பட்டாலும் அடையாளம் காணமுடியாத அளவுக்கு எரிந்துள்ளதாக தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

டாக்காவின் மிர்பூர் புகுதியில் உள்ள நான்கு மாடி தொழிற்சாலைக்கு வெளியே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நண்பகல் சுமார் 12 மணிக்கு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ, மூன்று மணி நேரத்திற்குப் பின்னர் அணைக்கப்பட்டது.

ஆனால் அருகிலுள்ள இரசாயனக் கிடங்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மக்கள் தொகை அதிகம் உள்ள பங்களாதேஷில் பெரிய அளவிலான தீ விபத்துகள் ஏற்படுவது வழக்கமானது. இதற்குக் காரணம் பாதுகாப்புத் தரங்கள் குறைவாகவும், உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாகவும் இருப்பதுதான்.

அண்மைய ஆண்டுகளில் நூற்றுக்கணக்கானோர் தீ விபத்தில் அங்கு உயிரிழந்துள்ளனர். (நி)



# ஒரு வாரத்தில்

# 4 வருடமா

## - புடினை கடுமை



(வோஷிங்

"உக்ரைன்

தொடர்கிறார்

வாரத்தில் வெல்

தொடர்கிறது" எ

அமெரிக்க ஜன

கடுமையாக சா

அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஆர்ஜென்டினா ஜனாதிபதி ஜேவியர் மிலேயுடனான சந்திப்புக்கு பிறகு ஜனாதிபதி ட்ரம்ப் கூறியதாவது:

விளாடிமிர் புடினுக்கும் எனக்கும் இடையே நல்ல உறவு இருந்ததால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன்.

அவர் ஏன் இந்தப் போரைத் தொடர்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் போர் அவருக்கு மிகவும் மோசமாக இருந்தது. அவர் நான்கு வருடங்களாக ஒரு போரில் ஈடுபடுகிறார்.

அதை ஒரு வாரத்தில் அவர் வென்றிருக்க வேண்டும். அவர் ஏராளமான வீரர்களை இழந்திருக்கலாம், அநேகமாக, இது ஒரு பயங்கரமான போர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்த

# "நீங்கள் அழகாக இரு

## இத்தாலி பிரதமர் குறி

## சர்ச்சைப் பே



(கெய்ரோ)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இத்தாலியின் பிரதமர் ஜோர்ஜியா மெலோனியைப் பார்த்து பேசிய வார்த்தைகள், எகிப்தில் நடந்த சர்வதேச மாநாட்டில் சலசலப்பையும், இணையத்தில் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதையொட்டி, எகிப்தின் ஷர்ம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## முடிய வேண்டிய போர் கேத் தொடர்கிறது மையாக சாடிய ட்ரம்ப் -

ங்டன்)

ன் உடனான போரை புடின் ஏன் என்று தெரியவில்லை. ஒரு ல்லக்கூடிய போர் 4 வருடமாக என ரஷ்ய ஜனாதிபதி புடினை னாதிபதி டொனால்ட் ட்ரம்ப் டியுள்ளார்.



மிகப்பெரிய இறப்பு இது. எல்லாவற்றையும்விட இது பெரியது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு போர் உட்பட எட்டுக்கும் மேற்பட்ட போர்களை முடிவுக் குக் கொண்டு வந்தேன்.

இந்தியாவிற்கும், பாகிஸ் தானுக்கும் பெரும் ஆற்றல் இருந்தது என்று நான் நினைக்கிறேன். அதில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம்.

ரஷ்யாவிற்கும் உக்ரை னுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வரவேண் டும். அமெரிக்க உற்பத்தியா ளர்களிடம் இருந்து வாங்கா மல், தென் அமெரிக்க நாட்டில் இருந்து சோயா பீன்ஸ் வாங்குவதன் மூலம் அமெரிக்காவிற்கும், ஆர் ஜெண்டினாவிற்கும் இடை யில் பிளவை ஏற்படுத்த சீனா முயற்சி செய்கிறது.

சீனா வேண்டுமென்றே நமது சோயா பீன்ஸை வாங் காமல் நமது விவசாயிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துவது பொருளாதார ரீதியாக விரோ தமான செயல். அதற்கு பழி வாங்கும் விதமாக, சீனாவு டன் வணிகத்தை நிறுத்து வது குறித்து நாங்கள் வர்த்தக குழுவினர் உடன் பரிசீலித்து வருகிறோம் என ட்ரம்ப் தெரிவித்தார். (ஙி)

## இளைஞர்கள் போராட்டங்களால் மடகஸ்காரில் கவிழ்ந்தது ஆட்சி

### நாட்டை விட்டு ஜனாதிபதி ரஜோலினா ஓட்டம்

(அன்டனாநரிவோ)

மடகஸ்காரில், "ஜென் இசட்" எனப்படும் இளம் தலைமுறையினர் நடத்திய போராட்டம் தீவிரம டைந்துள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்த இரா ணுவம் மறுத்ததால், அந் நாட்டு ஜனாதிபதி ரஜோ லினா தப்பியோடிவிட்டதாக கூறப்படுகிறது.

கிழக்கு ஆபிரிக்க நாடான மடகஸ்கார், ஆபிரிக்க கண்டத்தின் தென்கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள தீவு நாடாகும். இது உலகின் நான்காவது பெரிய தீவு ஆகும்.

இங்கு பல வாரங்களாக இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடு களில், உள்நாட்டில் நில வும் பல்வேறு அவலங் களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசுக்கு எதிராக இளை ஞர்கள் போராட்டம் நடத் தினர்.

இதனால் ஈர்க்கப்பட்ட மடகஸ்கார் இளைஞர்களும் தங்கள் நாட்டில் உள்ள அவலநிலைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வறுமை, வாழ்வாதாரம், குடிநீர் மற்றும் மின்சார பற்றாக்குறை, ஊழல், மோசமான நிர்வாகம் மற்றும் அடிப்படைப் பொது சேவைகளின் நீண்டகால தோல்வி ஆகியவற்றுக்கு எதிராகவும், அந்நாட்டு ஜனாதிபதி பதவிவிலகக் கோரியும் இளைஞர்கள் போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

கடந்த செப்ரெம்பர் 25ஆம் திகதி தொடங்கிய இப் போராட்டம் தற்போது முழு மையான எழுச்சியாக மாறி யுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட் டுள்ள இளைஞர்களுடன், அந்நாட்டின் சக்திவாய்ந்த உயரடுக்கு இராணுவ பிரி வான சி.ஏ.பி.எஸ்.ஏ.டி..யும் தங் களது ஆதரவை வெளிப் படையாக அறிவித்தது.

போராட்டக்காரர்களுடன் இராணுவமும் இணைந்து கொண்டதையடுத்து, ஜனா திபதி ஆண்ட்ரி ரஜோலினா, சட்டவிரோதமாக தன் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி நடப்பதாக கூறி நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக கூறப் படுகிறது. ஆனால், அவர் தன் பதவியை இராஜினாமா செய்வது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிட வில்லை. (ஙி)

## நக்கிறீர்கள்" றித்து ட்ரம்ப் பச்சு



ல்-ஷேக் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ம்ப் தலைமையில் வரலாற்றுச் ப்புமிக்க அமைதி உச்சிமாநாடு நடை ற்றது.

இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் லைவர்கள் கலந்துகொண்டனர்.

இதில் பங்கேற்ற இத்தாலி பிரதமர் மெலோனியிடம் மனம் திறந்து பேசிய ட்ரம்ப்,

"நீங்கள் அழகாக உள் ளீர்கள் என்று சொன்னால் கோபப்பட மாட்டீர்கள் தானே? உண்மையில் நீங்கள் ஒரு அழகான பெண்," என்று தெரிவித்தார்.

மேலும், இதைத் தொடர்ந்து ட்ரம்ப் கிண்டலாக, "இதே வார்த் தையை நான் அமெரிக் காவில் பேசியிருந்தால், என்னுடைய அரசியல் வாழ்க்கையே முடிந்திருக் கும்" என்றும் தெரிவித் தார்.

ட்ரம்பின் இந்தப் பேச்சு, அரசியல் அரங்கில் ஒரு தலைவரை அவரது பணியின் அடிப்படையில் அல்லாமல், தோற்றத் தின் அடிப்படையில் மதிப்பிடுவதாகக் கூறி, சமூக ஊடகங்கள் மற் றும் இணையத்தில் கடுமையான விமர்ச னத்திற்குள்ளாகியுள் ளது. (ஙி)

## பேருந்து தீப்பிடித்ததில் 20 பேர் உயிரிழப்பு!

### ராஜஸ்தானில் சோகம்

(டில்லி)

ராஜஸ்தானில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஜெய் சால்மரில் இருந்து ஜோத்பூருக்குச் சென்ற தனியார் பேருந்து ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து விபத்துக்குள்ளா னது.

இந்த அனர்த்தத்தில் 20 பேர் உடல் கருகி உயி ரிழந்ததுடன், 16 பேர் படு காயமடைந்ததாக ராஜஸ் தான் பொலிஸார் தெரிவித் தனர்.



57 பயணிகளுடன் வந்த பேருந்து ஜெய்சால் மரில் இருந்து பிற்பகல் 3 மணியளவில் புறப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

ஜெய்சால்மர் - ஜோத்பூர் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, வாகனத்தின் பின் புறத்தில் இருந்து புகை வெளியேறத் தொடங்கி யது.

அதைக் கவனித்த சாரதி பேருந்தை நிறுத்தினார், ஆனால் சில நிமிடங்களில் அது தீப்பிடித்து எரிந்த தாக தெரிவிக்கப்படுகி றது.

விபத்தில் காயமடைந்த பயணிகள் மீட்கப்பட்டு சிகிச் சைக்காக ஜெய்சால்மரில் உள்ள ஜவ்ஹர் வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு


## 4,626 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4,626 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பில் 19 பேரும், சந்தேகத்தின் பேரில் 601 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 242 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 160 பேரும், மது



போதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 22 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 18 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3564 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985- இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc(IT),IT Officer (Australia)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16125

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:பூசம்
2இல்செவ்
கி-பா-31
உயரம்:6"
தகைமை/தொழில்-BSc,MSc,Team Leader
எதிர்பார்ப்பு: graduates
தொ.இ: B/16126

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
12இல் செவ்
கி-பா-56 3/4
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BA, PGDE, Teacher
எதிர்பார்ப்பு: Teacher,அரச உத்தியோகம்
தொ.இ: B/16128

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூரம்
கி-பா-05
உயரம்:5'3"
தகைமை/தொழில்-A/L, Police Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16129

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:சுவாதி
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Engineer
எதிர்பார்ப்பு: உயர்படிப்பு
தொ.இ: B/16131

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா: 32
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கணணி, Officer (pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/16143

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
கி-பா: 32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MD, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16148

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Engineering, Consultant(German)
எதிர்பார்ப்பு: Engineer
தொ.இ: G/16150

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-மூலம்
1 இல் சூரி செவ்
கி-பா: 30 1/2
உயரம்-5'2"
தகைமை/தொழில்: BSC,MSC (German)(Follwing)
எதிர்பார்ப்பு: Engineer, IT, Doctor
தொ.இ: G/16152

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: பூராடம்
5 இல் சூரிசெவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - BSc
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான ஆண்
தொ.இ: G/16154

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 461



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வேலை பிடிச்சிருக்கா!

ஒருவர் இருக்கிறார். ஒரு நல்ல உத்தியோகத்திலேதான் இருக்கிறார். ஆனால் எப்போது பார்த்தாலும் முகத்தை வெறுப்பாக வைத்திருப்பார். அப்படியே வருவார், போவார். "ஏன் சார் இப்படி இருக்கிறீர்கள்?" என்று விசாரித்தேன்.

ஏண்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று இருக்கு" என்றார்.

"உங்கள் வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டேன். "இல்லை!" என்றார்.

இப்படிப்பட்டவர்கள் வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியாது இது நிபுணர்கள் கருத்து.

வேலையை நேசிக்கத் தெரிந்தவர்கள் வெற்றி பெறுவார்கள் என்கிறார்கள் அவர்கள்!

எந்தத் துறையாக இருந்தாலும் சரி. அந்தத் துறையிலே வெற்றிகரமாக இருக்கிறவர்களை விசாரித்துப் பாருங்கள்.

"எனக்கு என் வேலை மிகவும் பிடிக்கும்!". என்று சொல்கிறவர்களாகத்தான் இருப்பார்களாம் அவர்கள்!

ஒருவனுக்கு பிடித்தமான பொழுதுபோக்கே அவனுடைய தொழிலாக இருந்துவிட்டால் அவனை மாதிரி கொடுத்து வைத்தவன் வேறு யாரும் இல்லை" என்கிறார் பெர்னார்ட்ஷா.

ஒரு தடவை மன்னர் ஹூமாயுன் உயிரை, தண்ணீர் மொண்டு ஊற்றுகின்ற தொழிலாளி காப்பாற்றினாராம். உடனே மன்னர் கேட்டிருக்கிறார்.

"உனக்கு என்ன வேண்டும் என்றாலும் கேள் தருகிறேன். உயர்பதவி வேண்டுமா?" என்று கேட்டாராம்.

"மன்னா! மக்களின் தாகம் தீர்க்கக்கூடிய இந்தப் பணியைவிட உயர்ந்தது உண்டா?" என்றாராம் அந்தத் தொழிலாளி அதனாலே மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது.

நாம் எல்லாம் அப்படி இல்லை. வேலை கிடைக்கின்ற வரைக்கும் கிடைத்தால் போதும் என்று இருக்கும் கிடைத்ததற்கு அப்புறம் ஏண்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று மிகவும் அலுத்துக்குவோம்.

சரி, நாம் இருக்கின்ற இடத்திலே நாம் வெற்றிகரமாக இருக்க வழி உண்டா? உண்டு.

முக்கியமாக ஆறு வழிகள் சொல்கிறார்கள் மனவியல் நிபுணர்கள்.

நீங்கள் ஒரு அலுவலகத்திலே வேலை பார்க்கின்றவரா? அப்படி என்றால் இதை கேளுங்கள்.

உங்கள் மேலதிகாரி எதிர்பார்ப்புக்குத் தகுந்த மாதிரி உங்கள் வேலை இருக்கா? அப்படி இல்லை என்றால் முதலிலே உங்கள் வேலையின் தரம் உயரணும்.

உங்களுக்கு மேலே, பல வேலை பார்க்கின்ற பணியாளர்களிடம் நல்ல விதமாகப் பழகுகிறீர்களா?

அந்த உறவு முறையிலே ஏதாவது குறை இருந்தால் அதை கண்டு பிடித்து சரி செய்யுங்கள்.

நம்பிக்கைக்கு உரியவர் என்று நீங்கள் பேர் எடுக்க வேண்டும், நீங்கள் எடுக்கின்ற முடிவு நல்ல முடிவாகத்தான் இருக்கும் என்று அடுத்தவர்கள் சொல்ல வேண்டும்.

உங்கள் தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். இது, மனம், உடல் இரண்டும் சம்பந்தப்பட்டது. அதனாலே மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும். உடம்பையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் செயற்படுகின்ற விதத்தை நன்றாக புரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் இப்போது ஒரு காரியம் செய்கிறது என்று வைத்துகொள்ளுங்கள். ஏன் அப்படி செய்கிறது. எதற்காக அப்படி செய்கிறது. அதனுடைய குறிக்கோள் என்ன அது நீடிப்பதற்கு காரணம் என்ன இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிரிப்புக்கு வஞ்சகம் செய்யாதீர்கள். நல்லா சிரிக்க வேண்டும். அப்பதான் அது திரும்பக் கிடைக்கும்.

கடந்த கால தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். முதலாளி விருப்பம் தெரிந்து நடப்பது நல்லதுதான். அதற்காக "காக்கா" பிடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உங்களுக்கு ஒரு பொறுப்பான வேலை கிடைக்கிறது. உடனே சத்தம் - குழப்பம் என்று சூழ்நிலையை இறுக்கமாக ஆக்கிவிடக்கூடாது. எந்தச் சூழலையும் இயல்பாகக் கையாளக் கூடியவர் என்பதைக் காட்ட வேண்டும்.

இதெல்லாம். உங்கள் துறையில் நீங்கள் வெற்றி பெற நிபுணர்கள் சொல்கின்ற யோசனைகள்!

இவ்வளவு விபரமும் நான் சொல்லிவிட்டு ஒருவரைப் பார்த்து கேட்டேன். "இப்போது சொல்லுங்கள். நீங்கள் செய்கின்ற வேலை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" என்றேன். "ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்றார்.

"சரி.. என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சும்மாதான் இருக்கிறேன்!" என்றார் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழா அதன் நிறுவனர் கோகிலா மகேந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஞாயிறு தோறும் கடந்த ஆறு மாதங்களாக இடம்பெற்ற 'ஆளுமை' வகுப்பில் சித்தி பெற்றவர்களுக்கான பயிற்சி சான்றிதழ்களும், பரிசுகளும் கவிஞர் சோ. பத்மநாதனால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் கோகிலா மகேந்திரனால் எழுதப்பட்ட மூன்று நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன. (படம்: சிவசாந்தன்)



சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வாணி விழா, சாதனையாளர் கௌரவிப்பு மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை அதிபர் க.ரமணன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றன. (படம்: சுபேசன்)




உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தின் கச்சாய் உப அஞ்சல் அலுவலகம் தேசிய சேமிப்பு வங்கி பண வைப்பில் அகில இலங்கை ரீதியாக முதலிடத்தை பெற்றுக் கொண்டதற்கமைவாக கச்சாய் உப தபாலதிபர் பா. ஜெகபவனை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொடிகாமம் பிரதான தபாலகத்தில் இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 300 | 150 |
| கோவா | 160 | 180 | 200 | 200 |
| கரட் | 250 | 250 | 250 | 240 |
| பூசணி | 80 | 60 | 80 | 80 |
| புடோல் | 300 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 240 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 250 | 150 |
| கீரை - 1 பிடி | 150 | 80-140 | 150 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1800 | 1600 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 900 | 1200 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 600 | 450 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 250 |

## பொருளாதார மத்திய நிலையம் நேற்றைய மரக்கறி விலை

| மரக்கறி வகைகள் | மட்டுவில் |
|---|---|
| | ரூபா |
| உ..கிழங்கு (நுவரேலியா) | 220 |
| உ..கிழங்கு (ஈரான்) | 215 |
| உ..கிழங்கு (பாகிஸ்தான்) | 180 |
| கரட் | 160 |
| லீக்ஸ் | 160 |
| தக்காளிப்பழம் | 170 |
| போஞ்சி | 350 |
| கோவா | 160 |
| உள்ளி | 400 |
| கெக்கரிக்காய் | 120 |
| கொய்யாப்பழம் | 400 |
| வெண்டிக்காய் | 150 |
| முள்ளங்கி | -- |
| பூகோவா | 300 |
| கறிமிளகாய் | 320 |
| வற்றாளை | -- |
| பீட்ரூட் | 100 |
| கத்தரிக்காய் | 150-200 |
| கரணைக் கிழங்கு | 500 |
| வாழைக்காய் | 80 |
| பயிற்றங்காய் | 200 |
| பாவல் | 350 |
| மரவள்ளிக் கிழங்கு | 200 |
| பச்சை மிளகாய் | 220 |
| பெ.வெங்காயம் (இலங்கை) | -- |
| பெ.வெங்காயம் (இந்தியா) | 160 |
| பெ.வெங்காயம் (சிறிது) | 120 |
| சின்ன வெங்காயம் | 120-200 |
| இராசவள்ளி | 800 |
| இஞ்சி | 800 |
| முருங்கை | 120 |
| டுபாய் பூசணி | 120 |
| பூசணிக்காய் | 40 |
| கீரை | 120 |
| புளி | 760 |
| வத்தகைப்பழம் | 80 |
| பப்பாசி | 60 |
| கூட்டுறவு No.1 ஆட்டக்காரி குத்தரிசி 10 Kg | 2550 |
| கூட்டுறவு அரிசி மா 5 Kg | 1275 |

# இராசிபலன்

16.10.2025
புரட்டாதி 30, வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 2.35 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 5.06 மணிவரை
சுப நேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்: பூராடம், உத்தராடம்

**வளவன்**

**மேஷம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்கள் மூலம் சுப செய்தியைப் பெறுவீர்கள், கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிறர் உதவியுண்டு, கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடா முயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வரவைக் காட்டிலும் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள் வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறை வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம், வருமானம் உயர்வடையும் வாய்ப்புண்டு.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, திருடர் பயமுண்டு.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**விட்டுக் கொடுக்காதவர்கள் தங்களையே இழந்துவிடுவார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 886





சுந்தர சோழன் தனிமையாக இருக்கும் நேரம் எது என்பதைப் பார்த்து வைத்துக் கொள். சுந்தர சோழனுடைய பட்டமகிஷி எப்போதும் அவன் அருகிலேயே இருப்பாள். வெள்ளிக்கிழமை இரவு நிச்சயமாகத் துர்க்கா பரமேசுவரியின் கோயிலுக்குப் போவாள். அன்று இரவுதான் நீயும் உன் காரியத்தை முடிக்க வேண்டும்.

சுந்தர சோழனுடைய குலம் நிர்மூலமாகும் நாள் வெள்ளிக்கிழமை தான். முன்பின்னாக ஏதாவது நடந்தால் காரியம் கெட்டுப் போகலாம்!" என்றான் ரவிதாஸன்.

இப்படிப் பேசிக் கொண்டே இருவரும் விரைவாக நடந்தார்கள். சோமன் சாம்பவன் மட்டும் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே போனான். ஆயினும் அவர்கள் அறியாமல் தூண்களின் மறைவிலே ஒளிந்தும் சிறிதும் சத்தமின்றிப் பாய்ந்தும் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஊமை ராணி அவர்கள் கண்ணில் படவில்லை.

நிலவறைச் சுரங்கத்தின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கெதிரே நெடுஞ் சுவர் நின்றது. அதில் எங்கும் வாசல் இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால், சுவரின் உச்சியில் சிறு பலகணி வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்தது.

ரவிதாஸன் தீவர்த்தியைச் சாம்பவன் கையில் கொடுத்து விட்டு அந்தச் செங்குத்தான சுவரில் ஆங்காங்கு நீட்டிக் கொண்டிருந்த முண்டு முரடுகளைப் பிடித்துக் கொண்டு ஏறினான். பலகணி வழியாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கீழே சரசர என்று இறங்கினான்.

"அந்தப் பலகணி வழியாக வெளியில் குதிக்க வேண்டுமா? அதுதான் வழியா?" என்று சாம்பவன் கேட்டான்.

"இல்லை இல்லை அந்தப் பலகணி வழியாக எலிதான் நுழைந்து செல்லலாம். ஆனால் அது வழியாகப் பார்த்தால் சோழன் அரண்மனை தெரியும். அந்த அரண்மனையிலும் முக்கியமான இடம் தெரியும்" என்றான் ரவிதாஸன்.

"சுந்தர சோழன் படுத்திருக்கும் இடமா?" என்றான் சாம்பவன்.

"ஆமாம், அங்கே ஜன நடமாட்டம் எப்படியிருக்கிறது என்பதை இந்தப் பலகணியின் மூலமாகப் பார்த்து நீ தெரிந்து கொள்ளலாம். இப்போது என்னுடன் வா! நான் செய்கிறதை நன்றாகப் பார்த்துக் கொள்!"

இவ்விதம் கூறிவிட்டு ரவிதாஸன் கீழே குனிந்தான். உற்றுப் பார்த்து வட்ட வடிவமான ஒரு கல்லின் மீது காலை வைத்து அமுக்கிக் கொண்டு இரண்டு கையினாலும் ஒரு சதுர வடிவமான கல்லைப் பிடித்துத் தள்ளினான் கீழே ஒரு வழி காணப்பட்டது.

"கடவுளே! நிலவறைக்குள்ளே ஒரு பாதாளப் பாதையா?" என்று வியந்தான் சோமபன் சாம்பவன்.


"ஆமாம் இந்தப் பாதை இருப்பது பெரிய பழுவேட்டரையரையும் இளைய ராணியையும் தவிர யாருக்கும் தெரியாது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குறும்பு



(நேற்றைய தொடர்ச்சி)

பின்னர், மாணவர்கள் எழுதுவதை கவனித்துக் கொண்டிருந்தார். அரைமணி நேரத்தில் எல்லா மாணவர்களும் எழுதி முடித்து விட்டனர்.

"சரி... எல்லோரும் தங்களுடைய சிலேட்டை இங்கே என்னோட மேசையில் கொண்டு வந்து வையுங்கள். நான் பார்த்துவிட்டு மார்க் போடுகிறேன்" என்றார் டீச்சர்.

மாணவர்கள் வரிசையாக எல்லோரும் வந்து டீச்சரின் மேசை மேல் தங்கள் சிலேட்டுகளை வைத்து விட்டுச் சென்றனர். டீச்சர் ஒவ்வொரு சிலேட்டையும் எடுத்துப் பார்த்து மார்க் போட்டார்.

கடைசியாக வைத்த பாலன் சிலேட்டில் சைபர் மார்க் போட்டிருந்தார். எல்லோரும் தங்களுடைய சிலேட்டுகளை டீச்சரிடமிருந்து வாங்கிக் கொண்டனர். பாலன் மட்டும் எழுந்து நின்று கோபமாக பேசினான்.

"என்ன டீச்சர்... நான்தான் கணக்கின் விடையை சரியாக எழுதியிருக்கிறேனே... எனக்கு எதற்காக சைபர் மார்க் போட்டிருக்கிறீர்கள்.?" பத்மாவதி டீச்சர் அமைதியாகப் பதில் சொன்னார். "உனக்கு மட்டும் சைபர் மார்க் போடவில்லை. பாபுவுக்கும் சைபர் மார்க் தான் போட்டிருக்கிறேன்.

அவன் மௌனமாக உட்கார்ந்திருக்கிறான். நீ மட்டும் ஏன் கோபப்படுகிறாய்..." "அவனைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலை இல்லை. எனக்கு ஏன் சைபர் மார்க் போட்டீர்கள்?" என்று மறுபடியும் கோபமாகவே கேட்டான் பாலன்.

பாலன் பேசுவதை மற்ற மாணவர்கள் அச்சத்தோடு பார்த்தார்கள். "நீ உனக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருந்த கணேஷைப் பார்த்து காப்பிய டிச்சே. போர்டிலே நான் போட்டிருந்த கணக்கை உங்க சிலேட்டிலே எழுதி அதற்குரிய விடையை எழுதணும்.

இதிலே என்ன கஷ்டம். வாய்ப்பாடு ஒழுங்கா படிச்சிருந்தா எல்லோரும் கணக்கை சரியாகப் போட்டிருக்கலாம். நீ வீட்டிலே வாய்ப்பாடு படிக்கிறதில்லை போலிருக்கு. அதனால்தான் பக்கத்திலே உட்கார்ந்திருந்த கணேஷைப் பார்த்துக் காப்பியடிச்சிருக்கிறாய். நீ காப்பியடிச்சதினாலே உனக்கு சைபர் மார்க் போட்டேன்" என்றார் டீச்சர்.

பாலனின் மனம் வேறு கோணத்தில் திரும்பியது. "சரி... அப்புறம் பாபுவுக்கும் ஏன் சைபர் மார்க் போட்டீங்க. அவன் நல்லா கணக்குப் போட்டிருப்பானே.. என்று கேட்டான் பாலன். புன்முறுவலுடன் பாலனை மடக்கினார் டீச்சர். "அவன் நல்லா படிப்பானா..? உனக்குத் தெரியுமா..?" "நல்லா தெரியும். அவன் நல்லா படிப்பான். அதனாலதான் எனக்கு அவன்மேல பொறாமை. எப்படியாவது அவனிடம் சண்டை போடுவேன்" என்றான் பாலன்."

"பாலன்... இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமா இல்லையா.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைச் சுற்றிச் செயற்படும் விதிமுறைகளால் அனைத்தும் உண்டாக்கப்படுகின்றன.– டார்வின்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலேயே ஜனாதிபதி அநுரவின் வெற்றி தங்கியுள்ளது

நாடு முழுமையிலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான ஆதரவு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இதற்குக் காரணம் ஜனாதிபதி அநுரவின் எளிமையான நடைமுறைகளும் ஊழலை ஒழிப்பதில் அவர் கொண்டுள்ள கருசனையு மாகும்.

இதுதவிர, ஏழை மக்கள் மீது அவர் கொண்டுள்ள அக்கறை அவர் மீதான நன்மதிப்பை மேலும் உயர்த்துவதாக உள்ளது.

இதற்கும் மேலாக, வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தான் செல்லுகின்ற நாடுகளில் உள்ள இலங்கையர்களைச் சந்திப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பதையும் காணமுடிகிறது.

இவ்வாறு வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களைச் சந்திப்பதானது, அநுரவின் அரசியல் பலத்தை வீரியப்படுத்தும் என்பது சர்வநிச்சயம்.

இதைவிட, மலையகத் தமிழ் மக்கள் மீது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கொண்டுள்ள கருசனை முன்பு எந்த ஆட்சித் தலைவரிடமும் இருந்ததில்லை எனலாம்.

ஆம், இந்த நாட்டின் முன்னைய ஆட்சித் தலைவர்கள் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக அவர்கள் மீது கருசனை கொள்வது போல நடித்தனர்.

ஆனால் மலையகத் தமிழ் மக்களின் கஷ்டங்கள், அவர்களின் வாழ்விடங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கவலை கொண்டிருப்பது தெரிகிறது.

அதாவது மலையகத் தமிழ் மக்களுக்கு இந்த நாடு அநீதி இழைத்துள்ளது. அவர்களின் நலன்கள் குறித்து கடந்தகால ஆட்சியாளர்கள் பாராமுகமாக இருந்துள்ளனர்.

உண்மையில் மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கனிசமாக உயர்த்தி இருக்க வேண்டும். எனினும் அதனைச் செய்வதற்கு பேரினவாதம் இடம்கொடுக்கவில்லை என்ற உண்மையை ஜனாதிபதி அநுர ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதன் காரணமாகவே மலையக மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசின் ஒத்துழைப்பு எந்தவித காழ்ப்புணர்வுமின்றிக் கிடைத்து வருகிறது.

ஆக, ஜனாதிபதி அநுரவின் சமகால நடவடிக்கைகள் திருப்தியாக இருக்கின்றதாயினும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அநுர அரசாங்கம் முழுமனத்துடன் செயலாற்றி, இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு இருக்கக்கூடிய உரிமையும் அதிகாரமும் தமிழ் மக்களுக்கும் இருப்பதான ஏற்பாடுகளைச் செய்வதிலேயே ஜனாதிபதி அநுரவின் வெற்றி தங்கியுள்ளது.

# ஜே.வி.பி அன்று இந்தியாவை எதிர்த்திருக்காவிடின் இன்று இலங்கை சிங்கப்பூராக மாறியிருக்கும்

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியாவுடன் நட்பு பாராட்டும் மக்கள் விடுதலை முன்னணியினர் இந்திய எதிர்ப்புக் கொள்கையை முன்னரே கைவிட்டிருந்தால் இன்று மலேசியா, சிங்கப்பூரைப் போன்று சிறந்த பொருளாதார நிலைமையை அடைந்திருக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்திய எதிர்ப்பு கொள்கையைப் பின்பற்றி மைசூர் பருப்பினைக் கூட உண்ண வேண்டாம் என இனவாதம் பரப்பி 60 ஆயிரம் இளைஞர், யுவதிகளைக் கொன்று குவித்த மக்கள் விடுதலை முன்னணி இன்று இந்தியாவுடன் நட்புப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அதனை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் கடந்த காலங்களில் இவர்கள் இவற்றுக்கு வெளியிட்ட எதிர்ப்பினை நினைவுபடுத்துகின்றோம். கடந்த காலங்களில் இவர்கள் இடமளித்திருந்தால் இன்று மலேசியா, சிங்கப்பூரைப் போன்று சிறந்த பொருளாதார நிலைமையை அடைந்திருக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் அநுர தலைமையிலான ஜே.வி.பி. இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது என்றார். (ம-7)

# நித்திய மணல் கொள்ளைகளால் கடல் நீர் உட்புகும் அபாயம்

## டீலில் பொலிஸார்; அச்சத்தில் மக்கள்

(குடாரப்பு)

வடமராட்சி கிழக்கு, குடாரப்புப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ள நிலையில் அப்பகுதிக்குள் கடல் நீர் உட்புகக் கூடிய அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டதாவது,

அதேவேளை சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடும் மாமுனைப் பகுதியைச் சேர்ந்த நபர்களுடன் பொலிஸார் நட்புறவுடன் காணப்படுவதால் அவற்றைத் தடுக்க பொலிஸார் முன் வருவதில்லை எனவும் தினமும் 08 டிப்பர் மண் அப்பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் அகழ்ந்து எடுக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது.

சட்ட விரோத மணல் அகழ்வுகளை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பருத்தித்துறை மற்றும் மருதங்கேணிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தொடர்ந்து பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகள் காணப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு நேரில் சென்று, மணல் அகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளைப் பார்வையிட்டதுடன் மணல் அகழ்வு, போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பிலான விபரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

விரைவில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந் நிலையிலும் தொடர்ந்து சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)

## ஆசிரிய இடமாற்ற மேன்முறையீட்டு கால எல்லை நீடிப்பு – ஆளுநர்

வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் வெளியாகியுள்ள நிலையில் அதில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதும் எந்தவொரு ஆசிரியரும் மேன்முறையீடு மேற்கொள்ள முடியும் எனவும், மேன்முறையீட்டுக்கான காலம் எதிர்வரும் 22ஆம் திகதியுடன் நிறைவடைய இருந்த நிலையில் ஆசிரியர்களின் நலன் கருதி எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ம-7)

# வடக்கில் கட்புலனற்ற 95 பட்டதாரிகள் உதயம்

(யாழ்ப்பாணம்)

குற்றெழுத்து முறை மூலம் (பிரெயில்) கல்வி கற்று வட மாகாணத்தில் மாத்திரம், 95 கட்புலனற்ற பட்டதாரிகள் உருவாகியுள்ளதாக இலங்கைக் கட்புலனற்றோருக்கான அறக்கட்டளை நிலையப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

தாம் தினமும் பல்வேறு சவால்களுடன் வெள்ளைப்பிரம்புகளுடன் பயணிப்பதாவும் கட்புலனற்றவர்களைப் புறக்கணிக்காது அனைத்து தரப்பினரும் தங்களுக்கு ஆதரவு தர வேண்டும் எனவும் இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-7)

## சப்ரகமுவ மாகாணத்தில்

# தீபாவளிக்கு மறுநாளும் பாடசாலை விடுமுறை


(இரத்தினபுரி)

தீபாவளிப் பண்டிகைக்கு மறுதினமான எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்ப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது குறித்து பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராய்ச்சிக்கு விடுக்கப்பட்ட ஆலோசனைக்கமைய தீபாவளி தினத்திற்கு மறுநாளான எதிர்வரும் 21 ஆம் திகதி சப்ரகமுவ மாகாண தமிழ்ப் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலையை நடாத்துமாறும் மற்றும் இது சம்பந்தமாக சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் சப்ரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

24

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- ஊர்காவற்றுறை , காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார்-முல்லைத்தீவு ஆகும்.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதிக்குள் நெடுந்தீவுப் பிரிவு, தீவுப்பிரிவு மற்றும் வலிகாமம் மேற்குப் பிரிவு உள்ளடங்கின.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்குள் வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் வடக்குப் பிரிவுகள் உள்ளடங்கின.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்குள் யாழ்ப்பாணப் பிரிவு மற்றும் தென்மராட்சி பிரிவு உள்ளடங்கின.

பருத்தித்துறை தேர்தல் தொகுதிக்குள் வடமராட்சி மேற்குப் பிரிவு, வடமராட்சி கிழக்குப் பிரிவு, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி மற்றும் துனுக்காய் உள்ளடங்கின.

மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதிக்குள் வவுனியா உட்பட மன்னார் பிரிவு மற்றும் முல்லைத்தீவு பிரிவு உள்ளடங்கின.

கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 2 ஆகும். இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- மட்டக்களப்பு தெற்கு மற்றும் திருகோணமலை-மட்டக்களப்பு ஆகும்.

மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதிக்குள் பாணவபற்று, அக்கரைப்பற்று, நிந்தவூரும் கரைவாகுப்பற்றும், சம்மாந்துறைப் பற்று, எருவில்-போரதீவுப்பற்று, மண்முனைப்பற்று தெற்கு, வேவ்கம்பற்று, மண்முனைப்பற்று வடக்கு(பகுதி), மண்முனைப்பற்று கிழக்கு மற்றும் உடையார் பற்று உள்ளடங்கின.

திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்குள் பிந்தென்ன பற்று, மண்முனைப்பற்று வடக்கு (பகுதி), ஏறாவூர் பற்று, கோறளைப் பற்று, மட்டக்களப்பு உள்ளூர்ச் சபை மற்றும் திருகோணமலை மாவட்டம் உள்ளடங்கின.

டொனமூர் அரசியல அமைப்பின்படி முதலாவது இலங்கை அரச சபை தேர்தலும் தேர்தல் பகிஷ்கரிப்பும் இவ் எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் முதலாவது தேர்தல் ஜூன் 1931 இல் நடை பெற்றது. இத்தேர்தலில் வட மாகாணத்திற்கான 5 தொகுதிகளில் மன்னார்-முல்லைத்தீவு தவிர்ந்த மற்றைய 4 தொகுதிகளில் மக்களின் பகிஷ்கரிப்பால் தேர்தல் நடைபெறவில்லை. புது அரசியலமைப்பில் தமிழ் மக்களின் நலவுரிமைகளுக்கு ஏற்றமுறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை யென அவர்கள் அதிருப்தி கொண்டமையே இப் பகிஷ்கரிப்பிற்கு பிரதான காரணமாகும். இப் பகிஷ்கரிப்பு பின்னர் கைவிடப்பட்டு இதற்கான இடைத் தேர்தல்கள் 1934 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இவ்விரு தேர்தல்களிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது:- தாழ் பிரதேசச் சிங்களவர் -28, கண்டிச் சிங்களவர் -10, இலங்கைத் தமிழர்கள் -7, இந் தியத் தமிழர்கள்-2, ஐரோப்பியர் -2, முஸ்லீம் - 1.

ஆளுநர், 4- ஐரோப்பியர் 2- பறங்கியர் 1- இந்திய வர்த்தகர், 1- மலே இனத்தவர் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் நியமனம் செய்தார்.

**பின்வருவோர் இத் தேர்தல்களில் வெற்றி பெற்ற தமிழர்கள் ஆவர்**

வட மாகாணம்:-

- ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி:- யாழ் இந்துவின் அதிபராகவிருந்த நெவின்ஸ் செல்வதுரை.
- காங்கேசன்துறை தேர்தல் தொகுதி:- கௌரவ செனட்டர் சுப்பையா நடேசன்.
- யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி அருணாசலம் மகாதேவா.
- பருத்தித்துறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலம்.
- மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதி- முதலியார் ஆனந்தம் சீமான் பிள்ளை. இவர் சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலத்தை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

கிழக்கு மாகாணம்:-

- திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதி :- சட்டத்தரணி மயில்வாகனம் முதலியார் சுப்பிரமணியம். இவர் முதலாவது இலங்கை அரச சபையில் குழுவின் பிரதி தவிசாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.
- மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதி :- முஸ்லீம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

மத்திய மாகாணம்:-

- ஹட்டன் தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி பெரியண்ணன் சுந்தரம் (பெரி. சுந்தரம்) போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.. இவர் முதலாவது இலங்கை அரச சபையில் தொழில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்தவர்.
- தலவாக்கலை தேர்தல் தொகுதி:- எஸ்.பி.வைத்திலிங்கம்(1931)

மேல் மாகாணம்:-

- கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதி:- வட்டுக் கோட்டையைச் சேர்ந்த சேர் இரத்தினசோதி சரவணமுத்து (1931) தெரிவுசெய்யப்பட்டார். இவர் கொழும்பு மாநகர சபையின் முதலாவது மேயராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சேர் இரத்தினசோதி சரவணமுத்து தேர்தல் குளறுபடி வழக்கில் உறுப்பினர் பதவி இழக்க, அதே ஆண்டில் இவரின் இடத்துக்கு இவருடைய மனைவியான யாழ்ப்பாணத்தில் பிறந்த நேசம் சரவணமுத்து, டாக்டர். எச். எம். பீரிஸை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இவர் சட்டமன்றத்திற்கு தெரிவான முதல் தமிழ் பெண்மணியாவர். இவர் வெற்றிபெற ஆதரவாகச் செயற்பட்டவர்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க முக்கிய மானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தமிழ் வர்த்தகர் சார்பில் D.B.I. சேவியர் முதலாவது அரச சபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது அரச சபை 1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி கலைக்கப்பட்டது

1931 ஆம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட டொனமூர் திட்டம் இலங்கை மக்களின் எண்ணங்களையும் ஆசைகளையும் திருப்தி செய்ய முடியவில்லை. நீண்டகாலம் அரசியற்றுறையில் ஈடுபட்டிருந்த அனுபவம் மிக்க பெரியார்கள் மாத்திரமன்றி, அரசியலில் புகுந்த சேர். பாறன் ஜெயதிலகா, D. S. சேனநாயக்கா, ஜோன் கொத்தலாவலை போன்ற புது முகங்கள் கூட, டொனமூர் திட்டத்தில் மலிந்துகிடந்த அதி கெடுதியான அம்சங்களைக் கண்டித்து, அரசியலில் மாற்றம் வேண்டுமெனக் கிளர்ச்சிகளை ஆரம்பித்தனர்.

1932 ஜூலை மாதம், திரு. E. W. பெரேரா, அரசுக்கழக அமைப்பைப் பற்றிய பல தொடர்பான தீர்மானங்களைச் சபையில் சமர்ப்பித்தார். 1933 ஏப்ரலில் மந்திரிகள் புதுத் திட்டமொன்றினைத் தயார் செய்தனர். அதில் அவர்கள் , அரசாங்க அலுவலாளரின் ஆட்சியை ஒழிக்கவும், அவர் களின் கடமைகளை இலங்கை மந்திரிகளின் கைகளில் ஒப்படைக்கவும், தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கவும் வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

நிர்வாகக்குழு ஆட்சி முறைக்குப் பதிலாக அமைச்சரவை ஆட்சிமுறை நிறுவப்பட வேண்டு மென்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாக அமைந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம்..

கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் பணத்தை ஈட்டியதாகச் சந்தேகிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையே இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால மேற்கொண்டு வருகின்றார்.

அவர்களிடம் சந்தேகிக்கப்படும் அளவிற்கு ஒரு தொகைப் பணம் காணப்பட்டதால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்த இடமாற்றம்முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு இருவரும் விரைவில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என அறிய முடிகிறது. (ம-7,104)

மஹஜன சம்பத
திகதி 2025.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 5983
D 2 8 0 5 4 4
அத சம்பத
D 0 5 4 4
சீட்டிழுப்பு இலக்கம் 0558
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 0899
கடகம் 03 20 22 36

தன நிதானய
திகதி - 2025.10.15
சீட்டிழுப்பு இலக்கம் - 2013
L 04 13 65 69 L
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 15/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2331
Q 13 06 28 42 46

ஜய ஜய
திகதி 2025.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 0251
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 5 6 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4225
சீட்டிழுப்பு திகதி 15.10.2025
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 26 62 64 67
F
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 1292
கன்னி 07 21 22 36 கன்னி
தேசிய லொத்தர் சபை

## நகை, பணம்...

வற்றைத் திருடிய இளைஞர் ஒருவர் நேற்று சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரை நேற்று கைது செய்தனர்.

குறித்த நபர் திருடுவதற்கு தயாராகும் ஊரில் வாடகைக்கு ஒரு வீட்டினை எடுத்துத் தங்கி நின்று, தான் திருடவுள்ள வீட்டை முழுமையாக நோட்டமிட்ட பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறி சில நாட்களின் பின்னர் திருட்டில் ஈடுபடுவார். இது அவரது வழமையான செயற்பாடு எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## கொடிகாமத்தில்...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிராமத்தில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு கத்தி, கோடரி, மண்வெட்டி கொண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அதில் 5 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## யாழ்.நீதிமன்றப்...

இராசபாதையில் அமைந்துள்ள கோப்பாய்ப் பொலிஸ் நிலையம் கடந்த 30 வருடங்களாகப் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலும் பயன்பாட்டிலும் இருந்து வந்தது.

அந்தக் காணியின் உரிமையாளர்கள், காணியைத் தம்மிடம் கையளிக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும் அதற்குப் பலன்கிட்டவில்லை.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு காணிகளுக்குச் சொந்தமான 07 உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த நிலையில் கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இதில் 07 பேருக்குச் சொந்தமான 40 பரப்புக் காணிகள் காணப்படுகின்றன. இவை நீண்டகாலமாகப் பொலிஸ் கட்டுப்பாட்டில் இருந்தமையால் காணி உரிமையாளர்கள் இணைந்து யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

தற்போது 30 பரப்புக் காணி மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஏனைய 10 பரப்பு விடுவிக்கப்படவில்லை.

தற்போது ஒரு வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணிக்கான வழக்கு நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது.

அதன் பிரகாரம் பொதுமக்களின் காணியிலிருந்து வெளியேறி அந்தக் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

எனினும் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பொலிஸார் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றுப் புதன் கிழமை நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற, நீதிமன்றப் பதிவாளர் கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு வருகைதந்து, அங்குள்ள பொலிஸாரை வெளியேற்றி, காணியை உரிமையாளர்களிடம் கையளித்தார். (ம-7,33)

## சங்குப்பிட்டியில்...

தாயாரான சுரேஸ்குமார் குலதீபா (வயது-36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனை முடிவுகளில் குறித்த பெண் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## பலப்...

களும் நேற்று இரவு நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச்சொந்தமான UL 182 ரக விமானத்தின் ஊடாக காத்மண்டுவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு முன்னதாக விசேட அதிரடிப் படையின் இரண்டு அதிகாரிகள் நேபாளத்திற்குப்புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

ஏற்கெனவே நேபாளத்தில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களக் குழுவிற்கு உதவுவதற்காக அவர்கள் இவ்வாறு சென்றிருந்தனர்.

நேபாளத்தின் காத்மண்டுவில் இருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்த போது, நேபாள பாதுகாப்புப் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையில் இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இஷாரா செவ்வந்தியுடன் மற்றொரு பெண் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் தற்போது பொலிஸ் காவலில் உள்ள கெஹெல்பத்தர பத்மேவின் நெருங்கிய கூட்டாளியும் ஒருவரும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'கணேமுல்ல சஞ்சீவ' கடந்த பெப்ரவரி 19 அன்று புதுக்கடை நீதிமன்றத்திற்குள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி ஏற்கெனவே கைது செய்யப்பட்ட நிலையில், முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் இஷாரா செவ்வந்தி தப்பிச் சென்றிருந்த நிலையில் நீண்ட நாட்களாகத் தேடப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை கெஹெல்பத்தர பத்மேவின் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.10.2025 வெற்றி வாரம் 0691
ஆங்கில எழுத்து C
1 4 5 2 5 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,464,590.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2957
சீட்டிழுப்பு திகதி 2025.10.15 தினம் புதன்கிழமை
09 17 21 47 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,474,824.00
DLB

சனிதா
திகதி 15.10.2025 வெற்றி வாரம் 5118
51 60 71 77 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,275,174.80
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.10.15 வெற்றி வாரம் 2170
14 16 19 47 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,241,084.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4669
சீட்டிழுப்பு திகதி 15.10.2025 தினம் புதன்கிழமை
08 17 18 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 37 47 58 69 70
சுப்பர் இலக்கம்
2133
15.10.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.600,392,252.00
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2783
சீட்டிழுப்பு திகதி : 2025.10.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,397,521.60
ADA KOTIPATHI
13 23 46 72 I
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரகீத்...

இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு யுத்தத்தின் போது அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் இயங்கிய உத்தியோகபூர்வமற்ற ஒரு குழுவே தெற்கில் இடம்பெற்ற பிரகீத் எக்னலிகொட மற்றும் லசந்த விக்ரமதுங்க ஆகியோரின் கடத்தல்களை மேற்கொண்டதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

சுரேஷ் சலே, கபில கெந்த விதாரண உள்ளிட்ட அப்போது ஓய்வுபெற்ற புலனாய்வு அதிகாரிகள் குறித்த உத்தியோகபூர்வமற்ற குழுவில் உள்ளடங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது வடக்கு, கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததாகவும், தெற்கின் பாதுகாப்பானது கோட்டாபயவின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் சரத் பொன்சேகா கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா, கொழும்பு உள்ளிட்ட தெற்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகள் எதுவும் மறைமுகமாக மேற்கொள்ளப்படவில்லை.

எங்களுடைய அமைப்பில் அப்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த புலனாய்வு அதிகாரிகள் எவரும் இந்தக் கடத்தல்களில் ஈடுபடவில்லை.

தெற்கின் புலனாய்வு நடவடிக்கைகள் தனியாக கோட்டாபய ராஜபக்ஷ வின் தலைமையில் இடம்பெற்றன. கோட்டாபயவுக்கு தனிப்பட்ட ரீதியில் செயற்பட்ட ஓய்வு பெற்ற புலனாய்வு அதிகாரிகளே இந்தக் கடத்தல்களுக்கு உடந்தையாக இருந்தனர். இந்த விடயங்கள் தொடர்பில் கோட்டாபய என்னிடம் எதுவும் தெரிவித்ததில்லை எனத் தெரிவித்தார். (ம-7)

## தெற்குக்...

தெற்குக் கடலில் 839 கிலோகிராம் போதைப்பொருள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

கடலில் மிதந்துவந்த 50 பொதிகள் மீட்கப்பட்டிருந்தன. அதில் 670 கிலோகிராம் ஐஸ்போதை, 156 கிலோ ஹெரோயின் மற்றும் சுமார் 12 கிலோ ஹஷீஷ் போதை என்பன அடங்கும்.

இவை உனாகுருவே சாந்த என்ற போதைப்பொருள் கடத்தல்காரருக்குச் சொந்தமானவை எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதத் தொடக்கத்தில், மூன்று படகுகள் மூலம் போதைப்பொருட்கள் நாட்டிற்குள் கடத்தப்படவுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவுக்கு தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து, பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையில், கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் பணியகம் தேவேந்திரமுனை மற்றும் தங்காலை கடல் பகுதிகளில் 32 நாட்கள் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சம்பந்தப்பட்ட படகுகளுடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும், எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. படகுகளின் இருப்பிடத்தைக் கண்டறிய பயன்படுத்தப்படும் **VMS (Vessel Monitoring System)** அமைப்பு செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப்படையின் உதவியும் பெறப்பட்ட போதிலும், இந்த மூன்று படகுகள் தொடர்பான எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. எனவே, இந்தப் பொதிகள் சந்தேக நபர்களால் கடலில் வீசப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ம-7)

## மாகாண...

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மாலை 3.00 மணியளவில் ஆரம்பமான இக்கலந்துரையாடலில், வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தலைமையில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில், சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முருகேசு சந்திரகுமார், வேந்தன் உள்ளிட்ட தமிழ் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அரசாங்கம் அடுத்த வருடம் அளவில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடும் என அறிவித்துள்ள நிலையில், தேர்தல் தொடர்பான கட்சிகளின் நிலைப்பாடுகள், கூட்டாகப் போட்டியிடுவது மற்றும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகங்கள் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

தமிழரசுக் கட்சி சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், அக்கட்சியின் முக்கியஸ்தரான எம்.ஏ. சுமந்திரன் சுகவீனம் காரணமாகக் கலந்து கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலை எதிர்கொள்வதற்கான தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவு முயற்சிக்கு இக்கலந்துரையாடல் ஒரு முக்கியமான ஆரம்பகட்ட நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. (ம-7,33)




முல்லைத்தீவு மாவட்டத்திற்கு புதிய மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராக(நிர்வாகம்) திருமதி சதீசன் மஞ்சுளாதேவி நேற்றைய தினம்(15) கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராகத் தனது பணியை திறம்பட ஆற்றிய இவர், முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது பெண் மேலதிக அரசாங்க அதிபராக பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 02 - 1968



இறப்பு 15 - 10 - 2025

### சுப்பிரமணியம் மதியோகநாதன் (L.G.A)
### (நகராட்சி மன்றம், சாவகச்சேரி)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் 39/28, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மதியோகநாதன் அவர்கள் நேற்று 15.10.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியினரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான பரமு - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் ஜெயராணியின்(இலங்கை மின்சார சபை) அன்புக் கணவரும் சௌமியா(யாழ். பல்கலைக்கழகம்), ருக்சன், பிரத்வின்(யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனிஸ்ரனின் அன்பு மாமனாரும் செல்வராசா(லண்டன்), வசந்தராணி, நவரட்ணராஜா(ஓய்வூதியர்), இரவிச்சந்திரன் (முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் 2ம் கிளை), ஜெயராசா(லண்டன்), ஜெயச்சந்திரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.10.2025 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

39/28, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர். (5668)

077 826 8205
077 618 4500

தகவல்: குடும்பத்தினர்


## வேலையாள் தேவை

வீட்டில் தங்கி இருந்து மெஷினில் கொங்கிறீட் கல் அரிவதற்கு முன் அனுபவம் உள்ள ஆண் தேவை.

(1649)

077 996 7721

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4118)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புக்கு 076 636 3378 | 076 097 3127

## வீடு, காணி தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, முத்திரைச் சந்தி மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் நல்ல சூழலில் வீட்டுடன் அல்லது வெறும் காணி (2 பரப்பில்) உடன் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(தரகர் தேவையில்லை)

076 472 2467

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-4117)

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com

## யாழ்ப்பாணத்தில் Voyzant

### விசாக்கள்



இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, ஹொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)

+94763458646, 021 222 6866

(C-4109)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org